


**12. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் பசுமை பரப்பை அதிகரித்து எதிர்கால சந்ததியினருக்கு ஏற்ற வாழ்விட சூழல் உறுதி செய்யப்பட வேண்டுமென்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பொது சலுகை திட்டம் 2026 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

3. மறைந்த திரைப்பட பின்னணி பாடகி எஸ். ஜானகியின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்றுமாலை மைசூருவில் நடைபெறுகிறது.

4. தமிழகத்தில் மக்கள் விரும்பும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று மாநில சிறு குறு நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் திரு. மதன்ராஜா கூறியுள்ளார்.

5. FIFA உலககோப்பை கால்பந்து போட்டியின் அரையிறுதிக்கு நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா, இங்கிலாந்து அணிகள் முன்னேறியுள்ளன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய 3 நாடுகள் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று புதுதில்லி வந்தடைந்தார்.

தமது 3 நாடுகள் பயணத்தின் முதற்கட்டமாக இந்தோனேஷிய அதிபர் பிரபாவோ சுபியாண்டோ உடன் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து பிரதமர் ஆய்வு செய்தார்.

2-ம் கட்டமாக இந்திய – ஆஸ்திரேலிய வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்று முன்னணி தொழில்துறை தலைவர்கள் கூட்டத்தில் உரையாற்றினார்.

இறுதிகட்டமாக நியூசிலாந்தில் நேற்று அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பிரதமர், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு நீடித்த நட்பு மற்றும் வளமான எதிர்காலத்திற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப் பட்டிருப்பதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாட்டில் பசுமை பரப்பை அதிகரித்து எதிர்கால சந்ததியினருக்கு ஏற்ற வாழ்விட சூழல் உறுதி செய்யப்பட வேண்டுமென்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

அஹமதாபாத்தில் 405 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப்பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டி

பேசியஅவர், மக்கள் தங்களது வீடுகளில் சூரிய மின்சக்தி அமைப்புகளை நிறுவ வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ் பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஒன்னேகால் கோடிக்கும் அதிகமான மரக்கன்றுகள் நடும் மாபெரும் இயக்கத்தையும் திரு. அமித்ஷா தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

வருங்கால வைப்புநிதி

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அமைப்பு விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி முறையை செயல்படுத்தும் நிறுவனங்கள் தங்களது நிலையை முறைப்படுத்திக் கொள்ளும் வகையில் பொது சலுகை திட்டம் 2026 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் அடுத்த 6 மாத காலத்திற்கு செயல்பாட்டில் இருக்கும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 1961-ம் ஆண்டின் வருமான வரிச்சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி அறக்கட்டளையை நிர்வகித்து வரும் நிறுவனங்களுக்கு இத்திட்டம் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது.

தகுதியுடைய நிறுவனங்கள் இணையதளம் வாயிலாக அந்தந்த மண்டல அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

உணவு பாதுகாப்பு

உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் சட்டம் 2026-ன் விதிகளை மீறியதாக நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட புகார்களை அடுத்து ஸ்விக்கி, இன்ஸ்டாமார்ட் நிறுவனத்திற்கு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் ஒன்பது பிரிவுகளில் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஆணையம் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுகுறித்து சம்மந்தப்பட்ட உணவு வணிக நிறுவனம் விரிவான விளக்கம் அளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மீறினால் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முத்ரா

பிரதமரின் முத்ரா கடனுதவி திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபாய் வரை கடன் பெற, செயல்முறை கட்டணமாக 350 ரூபாய் செலுத்தக்கூறும் போலி ஒப்புதல் கடிதம் குறித்து பரவி வரும் செய்திகளை மத்திய பத்திரிக்கை தகவல் அலுவலக உண்மை சரிபார்ப்பு பிரிவு நிராகரித்துள்ளது.

முத்ரா நிறுவனம் சிறு தொழில்முனைவோர் அல்லது தனிநபர்களுக்கு நேரடியாக கடன் வழங்குவதில்லை என்றும் தெளிவுப்படுத்தியுள்ளது.

இத்தகைய செய்திகளின் அடிப்படையில் பொதுமக்கள் பணம் அனுப்புவதையோ அல்லது தனிப்பட்ட மற்றும் வங்கி விவரங்களை பகிர்ந்து கொள்வதையோ தவிர்க்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஏமன்

ஏமன் நாட்டிற்கு செல்லும் இந்தியர்களுக்கு கடந்த 2017-ம் ஆண்டு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை மத்திய அரசு தற்போது தளர்த்தியுள்ளது.

இருப்பினும் அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அங்கு வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்புடன் இருக்குமாறும், அவசர தேவைக்கு ரியாத்தில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கத்தார்

கத்தார் நாட்டு முன்னாள் இளவரசர் ஷேக் ஹமத் பின் கலீஃபா அல்தானி மறைவிற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமது சமூக வலைதள பதிவில் பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், தொலைநோக்கு பார்வையுடன் அந்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்டவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜானகி

மறைந்த பின்னணி பாடகி எஸ். ஜானகியின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று மாலை மைசூருவில் நடைபெறுகிறது.

அவரது உடல் மைசூர் மஹாராஜா கல்லூரி மைதானத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

20 மொழிகளில், 48 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடி தலைமுறைகளை தாண்டி ரசிகர்களை தன்வசம் ஈர்த்தவர்.

33 மாநில விருதுகள், 4 தேசிய விருதுகளை பெற்று இசை உலகில் தனக்கென தடம் பதித்த பெருமைக்குரிய பல குரல்களில் பாடும் திறமை பெற்றவர்.

.. பாட்டு ..

அன்னாரின் மறைவிற்கு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு,

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன்

பிரதமர் திரு. நரேந்திரமோடி,

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன்,

ஆளுநர் திரு. ஆர்.வி. அர்லேக்கர்,

முதலமைச்சர் திரு. விஜய் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மதன்ராஜா

தமிழகத்தில் மக்கள் விரும்பும் அனைத்து திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று மாநில சிறு குறு நடுத்தர

தொழில்கள் துறை அமைச்சர் திரு. மதன்ராஜா தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் பல்வேறு துறைகள் சார்பில் 567 பயனாளிகளுக்கு 2 கோடியே 69 லட்ச ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியஅவர், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

விருதுநகர்

விருதுநகர் மாவட்டத்தில் விதிகளை மீறிய செயல்பட்டு வந்த 12 பட்டாசு ஆலைகளின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

தமிழ்நாடு நாள்

தமிழ்நாடு நாள் விழா வரும் 18-ம் தேதி கொண்டாடப்படவுள்ளது.

இந்நாளையொட்டி திருச்சி, பெரம்பலூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் 6 முதல் 12-ம் வகுப்பு மாணாக்கருக்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளதாக அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரத்தில் காமராஜரின் 124-வது பிறந்தநாள் வரும் புதன்கிழமை கொண்டாடப்படுவதை ஒட்டி இலவச கண் சிகிச்சை முகாம் இன்று நடைபெற்றது.

தொடர்ந்து பள்ளி மாணாக்கருக்கு இலவச நோட்டு புத்தகங்களும் வழங்கப்பட்டன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மகளிர் மற்றும் திருநங்கைகளுக்கான தொழில்முனைவோர் திறன்மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பத்மஜா தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி பெறுவோருக்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான தொழில்நுட்ப கருவிகள் மற்றும் பிணையமில்லா கடனுதவிகளும் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், வரும் 31-ம் தேதிக்குள் பயிர்க்காப்பீடு செய்துகொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு. மோகனச்சந்திரன் வலியுறுத்தி உள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் போதைப் பொருளுக்கு எதிரான மினி மாரத்தான் இன்று நடைபெற்றது.

இதில் திருச்சி, சென்னை, மதுரை, தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு, காளியூர் பெரிய ஏரியில் மீன்பிடி திருவிழா இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

நெல்லை நெல்லையப்பர் காந்திமதி அம்மாள் திருக்கோவிலில் நடைபெற்ற வளைகாப்பு திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

கால்பந்து

FIFA உலககோப்பை கால்பந்து போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் வரும் 15-ம் தேதி தொடங்குகின்றன.

முதல் அரையிறுதியில் பிரான்ஸ் – ஸ்பெயினையும்,

16-ம் தேதி நடைபெறும் மற்றொரு அரையிறுதியில் அர்ஜென்டினா - இங்கிலாந்தையும் எதிர்கொள்கின்றன.

முன்னதாக இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா – சுவிட்சர்லாந்தை 3-1 என்ற கோல் கணக்கிலும்,

இங்கிலாந்து - நார்வேயை 2-1 என்ற கோல் கணக்கிலும் வென்று அரையிறுதிக்கு முன்னேறின.

❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

விம்பிள்டன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸவ்ரோவ் - இத்தாலியின் ஜானிக் சின்னரை இன்று இரவு எதிர்கொள்கிறார்.

இன்று மாலை நடைபெறும் மகளிர் இரட்டையர் இறுதியாட்டத்தில் சீன, பிரான்ஸ் இணை – கனடா, பிரேசில் இணையுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖